செய்தி வெளியீடு எண் : 16 நாள் : 18.06.2021

## தேனி மாவட்டம்

## தென்மேற்கு பருவமழை தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளிதரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

--------------

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளிதரன், இ.ஆ.ப., அவர்கள், தென்மேற்கு பருவமழை தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, ஆலோசனைக் கூட்டம் மேற்கொண்டார்.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:**

தமிழகத்தில் பருவமழை, புயல், வெள்ளம் போன்ற பேரிடர் காலங்களில் பொதுமக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில், தமிழக அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு, துரிதமாக செயல்பட்டு வருகிறது. அதன்படி, தற்சமயம் தென்மேற்கு பருவமழை தொடங்கி உள்ளதால், அதனை கருத்தில் கொண்டு தமிழக அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்டத்தில் வருவாய்த்துறை, காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, பள்ளிக்கல்வித்துறை, சுகாதாரத்துறை, பொதுப்பணித்துறை உள்ளாட்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை, மின்வாரியத்துறை, வனத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை உள்ளிட்ட அரசுத்துறைகளும் ஒருங்கிணைந்து முனைப்புடன் செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் காரணமாக, கடந்த காலங்களில் பருவமழையின் மூலம் நீர் பிடிப்பு பகுதிகள் மற்றும் ஆற்றுப் பகுதிகளில் வெள்ள பெருக்கு உள்ளீட்ட எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும், மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ள பகுதிகளை கண்காணிப்பு குழு அலுவலர்கள் மற்றும் வட்ட அளவிலான கண்காணிப்பு குழு அலுவலர்களை தொடர்ந்து கண்காணித்து, கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளவும், வெள்ளம், மழையினால் பாதிப்புக்குள்ளாகும் பொதுமக்களை தங்க வைத்திட அந்தந்தப் பகுதிகளில் தேர்வு செய்யப்பட்டுள்ள தங்கும் இடங்களை தயார் நிலையில் வைக்கவும் துறைசார்ந்த அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பெரியகுளம் மஞ்சளாறு வடிநிலக் கோட்டத்திற்குட்பட்ட 99 கண்மாய்களில் 26 கண்மாய்களும், உத்தமபாளையம் பெரியாறு வைகை வடிநில உப கோட்டத்திற்குட்பட்ட 36 கண்மாய்களில் 3 கண்மாய்களும் நிறைந்துள்ளது.

பொதுபணித்துறை, நெடுஞ்சாலைதுறை (தேசிய/மாநில) மற்றும் உள்ளாட்சித்துறை அலுவலர்கள், நீர் நிலைப் புறம்போக்கு மற்றும் நீர் செல்லும் வாய்க்கால் அல்லது ஆறுகளில் உள்ள ஆக்கிரமிப்புக்களை பொதுப்பணித்துறையினரும் மற்றும் வருவாய்த் துறையினரும் பாலங்கள், சிறுபாலங்கள் மற்றும் வரத்து வாய்க்கால்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளதை உறுதி செய்திடவும், பாலங்கள் மற்றும் சிறுபாலங்களில் உள்ள அடைப்புகளை அகற்றி நீர் வழிந்தோடுவதற்கு ஏதுவாக தூர்வாரப்பட்டு, வெள்ளத்தினால் பாதிக்கக்கூடிய பகுதிகளில் தேவையான மணல் மூட்டைகள் தயார் நிலையில் உள்ளதை உறுதிசெய்திட வேண்டும். மேலும், மழைக்காலங்களில் பெறப்படும் நீரினை வீணாக்காமல் முறையாக சேமித்திடவும், உள்ளாட்சித்துறையின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீரினை குளோரினேற்றம் செய்யப்பட்டு வழங்கிடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பேரிடர் காலங்களில் பொது மக்களை மீட்க, நீச்சல் வீரர்கள், நாரிழை படகுகள் மற்றும் பரிசல்கள், மீட்கக் கூடிய உபகரணங்கள், மாநில பேரிடர் மீட்பு பயிற்சி பெற்ற குழுவினர், கால்நடைகளுக்கு பாதிப்பு ஏற்படின் அதற்கு தேவையான மருந்து பொருட்கள் மற்றும் உணவுப்பொருள்கள், பொதுமக்களுக்கு தேவையான மருந்து, மாத்திரைகள், அத்தியாவசியப் பொருட்களான அரிசி, மண்ணெண்ணெய், காலி சாக்கு பைகள் ஆகியவைகளை தயார் நிலையில் வைத்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாதிப்புகள் ஏற்படக்கூடிய முல்லைபெரியாறு நீர் பிடிப்பு பகுதிகள், ஆற்றங்கரைப்பகுதிகள், நீர்நிலைகளில் வசிக்கின்ற பொதுமக்கள் கவனமுடன், முன் எச்சரிக்கையுடன் இருக்கவும், குறிப்பாக எதிர்பாரத விதமாக மலைச்சாலைக்களில் மண் சரிவு ஏற்படின், அதனை உடனடியாக சீர்செய்யும் பணிகளை மேற்கொள்ளவும், சாலைகளில் விழும் மரங்கள் மற்றும் பாறைகளை அகற்றிட மர அறுவை இயந்திரம், ஜே.சி.பி போன்ற இயந்திரங்கள், மின் கம்பங்கள் உள்ளிட்ட தேவையான அனைத்து உபகரங்களை தயார் நிலையில் வைக்கவும் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மழை, வெள்ளம் மற்றும் இயற்கை பேரிடர் தொடர்பான தங்களது புகார்களை 1077 என்ற கட்டணமில்லா தொலை பேசி எண்ணிலும், 04546-261093 என்ற எண்ணிலும் தெரிவிப்பதற்கு பொதுமக்களிடையே போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் கொரோனா தடுப்பு பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருவதைப்போல், பேரிடர்காலங்களிலும் தங்களது பணியினை ஒருங்கிணைந்து சிறப்பாக மேற்கொண்டு, பொதுமக்களை பாதுகாத்திட உறுதுணையாக இருக்க வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், மாவட்ட ஊராக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஆர்.மணி, துணை காவல் கண்காணிப்பாளர்கள், பொதுப்பணித்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சுகாதாரத்துறை, வருவாய்த்துறை, நகராட்சி ஆணையாளர்கள் மற்றும் பேரூராட்சி, ஊராட்சி உள்ளீட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**